REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 3உ புதன் (16—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 4உ வியாழன் (17—3—55) [இதழ் 234

## பிச்சைக்காரர் முன்னணி

1951-ம் ஆண்டின் குடி மதிப்புக் கணக்குப்படி, கிராமப் பகுதிகளில் 3,43,418 பேர்களும், நகர்ப்புறங்களில் 1,44,489 பேர்களும் பிச்சைக்காரர்களாகவும் நாடோடிகளாகவும் இருந்தனரென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கணக்குப்படி பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள உத்திர பிரதேசம் முதலிடம் பிடித்துக்கொண்டது. (அதாவது மொத்தம் 97,242 பேர். அவர்களில் 27,420 பேர் பெண்களாவர்.) அடுத்தபடியாக 2-வது இடத்தை சென்னை மாநிலம் எட்டிப் பிடித்துக்கொண்டுள்ளது எனவும் தெரிகிறது.

# குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கு மரண ஓலை!

## ரூ. 1,000 மட்டுமே பரிசு வழங்கலாம்!

### மக்கள் சபையில் மத்திய அரசாங்க மசோதா

புதுடில்லி, மார்ச் 16—

குறுக்கெழுத்துப் போட்டிகளில் தரப்படும் பரிசுத்தொகைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, மக்கள் சபையில், இப்போது நடைபெற்றுவரும் கூட்டத்தின்போதே, ஒரு மசோதா வரும் என்று தெரிகிறது.

பல மாநில அரசாங்கங்கள் குறுக்கெழுத்துப் போட்டிகளையே முழுவதுமாக தடை செய்துவிட வேண்டும் என்று கோரி இருந்தபோதிலுங்கூட, மத்திய அரசாங்கம் அந்தப் போட்டிகளுக்கு உயர்ந்தபட்ச பரிசுத் தொகைகளை நிர்ணயிப்பது பற்றியே தனது கவனத்தைச் செலுத்திவருகிறது என்றும் கூறப்படுகிறது.

ஒரு தனிப் போட்டிக்கு ரூ. 1,000 (ஆயிரம்) உயர்ந்தபட்சத் தொகையாக நிர்ணயிப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே நிறுவனத்தால் (குறுக்கெழுத்துப் போட்டி நிறுவனம்) ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகள் நடத்தப்படுமானால், வருடத்தில் 10,000 (பத்தாயிரம்) ரூபாய்க்கு அதிகமாக பரிசுத் தொகை வழங்கக்கூடாது என்றும் வரம்பு நிர்ணயமாகுமென்று தெரிகிறது.

## தெற்கிற்கு அல்ல அந்தத் திட்டம்!

புதுடில்லி, மார்ச் 15—

இதுவரை இந்தியாவிலேயே இறக்குமதி செய்யப்பட்டுள்ளவற்றில் மிகப் பெரியதொரு மின்சார 'டிரான்ஸ்பார்மர்,' டெல்லியில் அது நிறுவப்படவிருக்கிற ஷக்கூர்பஸ்தி கிர் எனும் மின்சார விநியோக உப நிலையத்திற்கு பத்தாயிரம் மைல்கள் 'பிரயாணம்' செய்து வந்துள்ளது.

டெல்லி, மற்றும் அதைச் சுற்றியுள்ள நகர்ப் புறங்களுக்கு நங்கல் மின்சாரத் திட்டத்திலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை தேக்கி வைத்து விநியோகிப்பதற்காக, அந்த மின்சார நிலையம், பஞ்சாப் பொது மராமத்து இலாகாவால் கட்டப்படுகிறது.

சுமார் 5 லட்சம் ரூபாய் மதிப்புடையது அந்த 'டிரான்ஸ்பார்மர்'

இதன் மூலம் விநியோகிக்கப்படும் நங்கல் மின்சாரம், யூனிட் ஒன்றுக்கு 7 தம்பிடி வீதம் மாநில மின்சார விநியோக போர்டுக்குத் தரப்படுமாம். இப்போது டெல்லியில் யூனிட் ஒன்றுக்கு ரூ. 0—3—5 வசூலிக்கப்படுகிறது.

இதேபோல இன்னுமொரு 'டிரான்ஸ்பார்மர்' டெல்லிக்கு சீக்கிரமே வரவிருக்கிறது.

## டெல்லி ஆட்சியின் அலங்கோலம்

### விலை வீழ்ச்சியால் ரூ. 45 கோடி நஷ்டமடைந்ததாம்!

புதுடில்லி, மார்ச் 15—

"இந்திய சர்க்கார் கையிருப்பில் இருந்த அரிசியை விற்பனை செய்ததின் மூலம் சர்க்காருக்கு ரூ. 45 கோடி நஷ்டமேற்பட்டது," என்று, வரவு—செலவு உரையின் போது நிதி அமைச்சர் தேஷ்முக் கூறினதற்கான காரணம், உணவுப் பொருட்களின் விலைவாசிகள் எல்லாம் 'பெரும் அளவு'க்குச் சரிந்துவிட்டதேயாகும் என்று கூறப்படுகிறது.

தானியக் கட்டுப்பாடு ஒழிக்கப்பட்டசமயத்தில் மாநிலசர்க்கார்கள் கையிருப்பில் இருந்த எல்லா உபரி அரிசியையும் எடுத்துக்கொள்வதற்கு இந்திய சர்க்கார் முடிவு செய்திருந்ததாகவும் கூறப்பட்டது.

பண்டங்களின் இவ்விலைச் சரிவுக்குக் காரணம், உற்பத்திப் பெருக்கமே ஆகும்; 1952-53-ம் ஆண்டில் 10 லட்சம் டன் அரிசி அதிக உற்பத்தியாகிவிட்டது; 1953-ம் ஆண்டில் மொத்தம் 270 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது; முந்திய ஆண்டின் உற்பத்தியைவிட இந்த ஆண்டில் அரிசி உற்பத்தி 45 லட்சம் டன் அதிகமாகிவிட்டது; இவ்வாண்டிலும் (1954—55) அரிசி உற்பத்தி பிரமாதமாக இருக்கிறது. எனவே, விளைச்சல் அதிகமானதும் அரிசி விநியோக நிலையில் மாறுதல் ஏற்பட்டு விலைவாசிகள் வீழ்ச்சி அடைந்துவிட்டன என்று கூறப்படுகிறது.

## இலங்கையில் கொடுமை வளருகிறது

### திராவிடரை வெளியேற்ற குடியேற்றச் சட்டம் திருத்தப்படுகிறது

கொத்தலாவலையின் புதிய தாக்குதல்

கொழும்பு, மார்ச் 15—

இலங்கை குடியேற்றச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஒன்றை, பிரதமர் கொத்தலாவலை இலங்கை மக்கள் சபையில் தாக்கல் செய்துள்ளார்.

இப்போது 'விசா' வைத்திருப்பவர்களும், காலவரையான குடியிருப்பு அனுமதி பெற்றிருப்பவர்களும் தொடர்ந்து இலங்கையிலிருப்பதை சட்டவிரோதமாக்கி, அவர்களை உடனே இலங்கையிலிருந்து வெளியேற்றும் வகையில், குடியிருப்பு அனுமதி வழங்குவதை முழுவதும் ஒழித்துவிட திருத்த மசோதா வழிவகுத்துள்ளது என்று தெரிகிறது.

சந்தேகத்திற்குரிய நபர்கள், இலங்கையில் குடியிருப்பு அனுமதி பெறலாமா என்பதை சட்டப்படி நிரூபிக்கும் பொறுப்பும் இப்போது இந்த மசோதாவினால் உதறி எறியப்படுகிறது என்று தெரிய வருகிறது.

## மதச்சார்பற்ற அரசாங்கத்திற்கு இலக்கணம்!

### கலாச்சாரப் போர்வையில் மதப் புத்தகங்களை வெளியிடுகிறார்கள்!

மைசூர் அரசாங்கத்தின் போக்கு

மைசூர் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கலாச்சார நடவடிக்கைகளில், மேலும் அதிகமான மக்கள் பங்கு பெறுவதற்கான திட்டமொன்றைத் திட்டியுள்ளதாம்.

மாநிலத்தில் 500க்கு மேற்பட்ட இடங்களில் கலாச்சார சொற்பொழிவுகள் நிகழ்த்துவதுடன், சொற்பயிற்சிப் போட்டிகளும் நடத்தப்படுமாம்.

மத சம்பந்தமான புத்தகங்களை சர்க்கார் வெளியிடுமாம். அந்த வெளியீடுகள் மக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமாம். இந்த விஷயத்தில் கிராமங்கள் அதிகக் கவனம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

இத்தகவலை, மைசூர் மாநில கலாச்சார அபிவிருத்தி 'டைரெக்டர்' வெளியிட்டுள்ளார்.

## கைத்தறித் துணிக்கு மேலும் சலுகை

பம்பாய், மார்ச் 15—

இத்திங்கள் 20 முதல் 26 வரை நடைபெறவிருக்கும் அகில இந்தியக் கைத்தறி வாரத்தில் சில்லறையாக விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளுக்கு, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வரும் கமிஷனோடு மேலும் அரை அணா கொடுக்க இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

---

சேலம் நகரில் 14-ந் தேதி காலை பி. சி. ஜி ஊசி குத்துதல் பரவலாக ஆரம்பமாகியது. 276 இடங்களில் ஊசிபோட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

## எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு 59,958 பேர்!

சென்னை, மார்ச் 16—

இன்று சென்னை மாநில முழுமையிலும் 362 இடங்களில் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. பள்ளித் தேர்வுக்கு, 820 பள்ளிகளிலிருந்து மொத்தம் 59,958 பேர் பரீட்சை எழுத வந்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

## கல்லூரிகளில் தமிழ் மொழி

### விஞ்ஞானம் தவிர இதர பாடங்கள் தமிழில் போதிக்கப்படலாம்

சென்னை பல்கலைக் கழக செனேட் முடிவு

சென்னை, மார்ச் 16—

விஞ்ஞானம் தவிர, மற்றெந்த பாடங்களையும் தாய்மொழியிலேயே போதிக்க கல்லூரிகளை அனுமதிப்பது என்று சென்னை பல்கலைக் கழக செனேட், அகடாமிக் குழு ஆகியவை மேற்கொண்டுள்ள தீர்மான முடிவுகளை ஒவ்வொரு கல்லூரியின் நிர்வாகிகளுக்கும், கல்லூரித் தலைவர்களுக்கும் அறிவிப்பது என்று 'சிண்டிகேட்' தீர்மானித்துள்ளதாம்.

விஞ்ஞான பாடங்களில் வரும் கலைச் சொற்களுக்கு தென்னிந்திய மொழிகளில் வார்த்தைகள் தயாரிப்பது பற்றி சர்க்காரின் குழு என்று கவனித்து வருவதாக அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

---

1953-54-ல் 3,72,320 டன் ரசாயன உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றில் 3,07,170 டன் அம்மோனியம் சல்பேட் உரமும், 65,650 டன் சூபர்-பாஸ்பேட் உரமுமாகும்.

## அதிசயந்தான்!

'முஸ்லிம் லீக்' நிறுவனம் மதவிரோதமான ஒரு நிறுவனமாக மாறிக்கொண்டே வருகிறதென்றும், எனவே, அதைப் பதவியிலிருந்து தூக்கிவிட வேண்டுமென்றும் பாகிஸ்தானிலுள்ள தீவிர மத நிறுவனங்கள் பலவும் 'மும்முரமாக'ப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளனவாம்.

## தொழில் நுணுக்கக் கழகங்கள்

சென்னையில் நிறுவுவது பரிசீலிக்கப்படுகிறதாம்!

புதுடில்லி, மார்ச் 15—

கோரக்பூரிலுள்ள தொழில் நுணுக்கக் கழகத்தைப் போல் மேலும் சில உயர்தரத் தொழில் நுணுக்கக் கழகங்களை ஏற்படுத்துவதுபற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

சென்னையில் இதுபோன்ற ஒரு கழகம் ஏற்படுத்த வேண்டும் எனும் யோசனை பரிசீலனை செய்யப்படுமெனவும், ஆனால், 'சென்னை தொழில் நுணுக்கக் கழகம்' என்ற நிறுவனத்தை ஆரம்பமாக வைத்துக்கொண்டு அத்தகைய கழகம் ஏற்படுத்தப்படுமா என்பது பற்றி இப்போது எதுவும் சொல்வதற்கில்லை என்று மத்திய சர்க்கார் அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

## யானைப் பசிக்கு சோளப் பொரி!

### அரிசன மக்களுக்கு இலவச வீட்டு வசதி!

சென்னை, மார்ச் 15—

தீண்டாமை ஒழிப்புக்கான இரண்டாண்டுத் திட்டம் ஒன்றின்கீழ் ரூ. 1,30,000 செலவில் 'அரிசனங்'களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு இந்திய சர்க்கார் தெரிவித்திருந்த ஒரு திட்டத்தை அமுல் நடத்த சென்னை மாநில சர்க்கார் அங்கீகாரம் அளித்துவிட்டதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—3—55 புதன்


# மறந்தது போதும்!

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்குண்டு கிடந்த புதுவை, காரைக்கால் பகுதிகள் கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் விடுதலை பெற்றதும், உடன் அந்தப் பகுதிகள் இந்தியப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளானதும நாடறிந்ததே.

ஆட்சிப் பொறுப்பு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கையிலிருந்து வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர—பழைய அடிமை விலங்கு கழற்றப்பட்டு, புதியதொரு அடிமை விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர—புதுவை, காரைக்கால் பகுதி மக்கள் உண்மையான 'விடுதலை' பெற்றிருப்பதாகக் கொள்ள முடியாதென்பதை நாம் முன்பே எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

புதுவை, காரைக்கால் பகுதிகளில் வாழும் மிகப் பெரும்பான்மை மக்கள் தமிழர்கள்—திராவிடர்கள். அவர்களது ஒட்டும், உறவும் தமிழ்நாட்டுடன்தானன்றி வேறெங்குடனுமல்ல என்பதை அறிந்து கொள்ள ஆராய்ச்சி எதும் நடத்தத் தேவையில்லை.

அந்த நிலையில், புதுவை, காரைக்கால் பகுதி மக்களில் பெரும்பான்மையினர் தமிழ் மக்கள் என்ற தெளிவான காரணத்தினுல் தமிழ் மாகிலத்துடன் அவை இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அவ்வாறு இணைக்காமல் அப்பகுதிகளை தனது நேரடி நிர்வாகத்தின்கீழ் வைத்துக் கொள்ள முற்பட்ட இந்தியப் பேரரசின் போக்கு, ஏகாதிபத்திய எண்ணங்கொண்டது என்பதையும் நாம் எடுத்துக் காட்டத் தவறியதில்லை.

புதுவைப் பகுதிகள் இந்தியப் பேரரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ்தான் இருக்கவேண்டும் என்பதற்கான தகுந்த காரணங்களை இதுவரை இந்தியப் பேரரசு உட்பட எவரும் எடுத்துக்காட்டவில்லை.

புதுவை, காரைக்கால் மக்கள், தங்கள் இனத்தவர் வாழும் தாய்த் தமிழகத்துடன் ஒன்றி இணைந்து வாழ விரும்புவது இயற்கையானது; தேவையானதுங்கூட.

பிரெஞ்சுப் பிடியிலிருந்து புதுவைப் பகுதிகள் விடுபடு முன் அந்தப் பகுதி மக்கள், தாங்கள் 'விடுதலை' பெற்றதும், தாய்த் தமிழகத்துடன் இணைந்துதான் வாழ்வோம் என்று எண்ணி வந்திருக்கின்றனர் என்பதும் மிகையாகாது.

ஒரு மொழி பேசும் மக்கள், பல மாநிலங்களில் சிதறுண்டு வாழ்வது அவர்களின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதும், மொழி வழி மாநிலம் வேண்டுமென்பதற்கான அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாகும்.

இந்த அடிப்படையை நியாயமென ஒப்புக்கொள்ளும் எவரும், புதுவை, காரைக்கால் பகுதிகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் தமிழர் என்பது சந்தேகமறத் தெளிவானது என்பதால், அப்பகுதிகள் தாய்த் தமிழகத்துடன்தான் இணையவேண்டும் என்பதிலும், மாறுபட்ட கருத்துடையவராயிருக்க நியாயமில்லை.

புதுவை, காரை மக்களின் நலன், மொழிவழி மாநில அமைப்பு மற்றும் வேறெந்தக் காரணங்களாலும், அது தனி ஒரு மாநிலமாக இந்தியப் பேரரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கவேண்டுமென்று கூறிவிட முடியாது.

ஒரு சிலர், புதுவை, காரைப் பகுதிகளை ஒரு 'சி' பிரிவு மாநிலமாக்கிவிடவேண்டும் என்று கூடக் கூறி வருகிறார்களாம். அந்தக் கூற்று எந்த நியாய உணர்வும் கொண்டதல்ல; அந்தப் பகுதி மக்களின் உள்ளக்கிடக்கையை பிரதிபலிப்பதுமாகாது.

புதுவை, காரை மக்கள், தாய்த் தமிழக மக்களின் இரத்த பாசத்திற்குரியவர்கள். அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதிலே, வேறு எவருக்குமிருக்க முடியாத அளவு அக்கரை தாய்த் தமிழக மக்களுக்கு உண்டு—இருக்கத்தான் வேண்டும்.

இந்த நாட்டு மக்களுடன் சமூகத்தில் எவ்வகையிலும் தொடர்பு கொள்ளாத மார்வாரி, குஜராத்திக் கும்பல்கள் இங்கு குடியேறி இந்த மாநிலத்திலேயே வாழ்கின்றன. ஆனல், நமது இன மக்கள், புதுவை, காரைக்காலில் தனி மாநிலத்தில் வாழ வேண்டுமென்பது எந்தக் காரணத்திற்காக என்பது நமக்கு விளங்காத ஒன்றாயிருக்கிறது.

இந்தப் பிரச்னை குறித்து, புதுவை, காரை மக்கள் கருத்தறிவிப்பார்களானல், அது, 'நாங்கள் தாய்த் தமிழகத்துடன்தான் வாழ்வோம்,' என்ற கருத்தாகத்தான் இருக்கும் என்று நம்புகிறோம்.

ஆகவே, அந்தப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணையவேண்டுமென்பதில், அவர்களுக்கு இருக்கிற அக்கரையின் அளவாயினும், ஏன் அதிகமாகக்கூட, தாய்த் தமிழக மக்களுக்கும் இருந்தாகவேண்டும்; ஏனெனில், அவர்கள் நமது உறவினர்கள்—இனத்தவர்கள் என்பதால்.

ஆகவே, அந்தப் பகுதி மக்கள் தாயகத்துடன் இணைவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டியது இங்குள்ள சென்னை அரசியலாரின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

அந்தப் பகுதிகள் தமிழகத்துடன் இணையவேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்தி, அதைச் செய்து முடிக்கவேண்டிய பொறுப்பு சென்னை அரசாங்கத்திற்கு உண்டு. ஆனல், இதுவரையில் புதுவை, காரைப் பகுதிகளை தமிழகத்துடன் இணைத்துவிடலாம் என்ற ஒரு சிபாரிசினைக் கூட சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் செய்யவில்லை என்று சட்ட சபையில் நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

பொறுப்புணர்ந்து கடமையாற்றவேண்டிய மந்திரியார், கடமை மறந்து, வெறும் சிபாரிசினைக் கூடச் செய்யவில்லை என்பது வேதனையானது—கண்டிக்கத் தக்கது.

இனியாவது, புதுவை, காரை மக்கள் தமிழ் மக்களின் சோதரர்கள் என்பதை உணர்ந்து, மத்திய அரசாங்கத்திற்கு தெளிவுபட பிரச்சினையை விளக்கி, அவை தமிழகத்துடன் இணைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, சென்னை அரசாங்கம் முனைய வேண்டும் உடனடியாக.

கடமை மறந்தது போதும்; இனியும் காலம் தாழ்த்தாதீர்.

# சென்னை சட்டசபையில்....

★

## கடமை தவறினர்!

"புதுவை, காரைக்கால், மாகி ஆகிய முன்னுள் பிரெஞ்சுப் பகுதிகளை சென்னை மாநிலத்துடன் சேர்த்துவிடும்படி மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறதா?" என்று கேட்டதற்கு, 'இல்லை' என்று நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

"அந்தப் பகுதிகளில் எல்லை ஓரங்களில் நிலச்சுரங்கத்தை ரத்து செய்வது பற்றி மாநில சர்க்காரை மத்திய சர்க்கார், கலந்தாலோசித்ததா?" என்று கேட்கப்பட்ட போதும், அவர் 'இல்லை' என்றே கூறியிருக்கிறார்.

## என்ன காரணத்திற்கோ?

புதுவை, காரைக்கால் பகுதிகளிலிருக்கும் போலீசாருக்கு உதவியாக இருக்க இந்திய அரசாங்கம் கோரியபடி, மலாபார் போலீஸ் படையின் பிரிவு ஒன்று, சென்னையிலிருந்து அங்கு அனுப்பப்பட்டிருப்பதாயும், அந்தப் பிரிவு போலீசார் அங்கிருக்கும் வரை அதற்காகும் செலவை புதுவை அரசாங்கமே மேற்கொள்ளும் என்றும் நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார்

## பாரதியார் பாடல்கள்

"சர்க்காரிடமிருக்கும் பாரதியாரின் நூல்கள் மக்களுக்கு எவ்வித தங்கு தடையுமின்றித் தரப்படும்; மக்கள் நன்கு அவற்றை உபயோகிக்கலாம்; ஆனல், அதிகாரபூர்வமாக இருப்பதை மாற்றவோ, திருத்தவோ செய்யாமல், அப்படியே உபயோகிக்க வேண்டும்." என்று கல்வி மந்திரி கூறியிருக்கிறார்.

## தமிழ் பற்றிய தகராறு

ஆங்கிலம் தெரிந்த மந்திரிகள் சட்டசபையில் தமிழில் கேள்விகளுக்கு பதிலளிப்பதும், பேசுவதும் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது," என்று எம். கோபாலமேனன் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினர்; 'ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களுக்கு தமிழ் புரியவில்லை,' என்றும் அவர் குறை கூறியிருக்கிறார்.

இதற்குப் பதிலளித்த நிதி மந்திரி, ஆங்கிலத்தில் பேசினல் சபையில் பாதிபேருக்கு மேல் புரியவில்லை என்றும், மேலும் மந்திரிகள் பேசுவது பெருவாரியான உறுப்பினர்களுக்குப் புரிய வேண்டியதாகும் என்றும், அதனல் தமிழில் பேசுவது அரசியல் சட்டத்திற்கு முரணாகாது என்றும், தமிழ்நாட்டைப் பற்றிய விவகாரங்கள்தான் தமிழ் மொழியில் பேசப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுவிட்டு, சபையில் பல மொழி பேசுவோரும் இருப்பதை உணர்ந்து; பொதுவாகவும், சபை நடவடிக்கைகளுக்குத் தகுந்த வகையில் நடக்கும்படியுமே சர்க்கார் நடந்து கொள்வதாகவும் தெரிவித்திருக்கிறார்.

## உரிமைப் பிரச்சினை

சட்டசபை நடக்கும்போதோ அன்றி 'கமிட்டி'க் கூட்டங்கள் நடக்கும்போதோ சபை உறுப்பினர்கள் மீது 'வாரண்ட்' அல்லது 'சம்மன்' சாதரா செய்வது உரிமையைப் பாதிப்பதாகுமென்பதில், 'சட்டசபைக் கட்டிட எல்லை' என்பதை எந்தெந்த இடங்களைக் குறிக்கும் என்று முடிவுகூறும்படி, உரிமைக் குழுவை சபைத் தலைவர் சிவசண்முகம் பிள்ளை கோரியிருக்கிறார்.

அடுத்த சட்டசபைக் கூட்டத்தின் மூன்றும் நாள் கூட்டத்தின் போது முடிவைத் தெரிவிக்கும்படி தலைவர், குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிராமாந்திர பாங்கிகள்

நஷ்டமேதும் ஏற்படாதவகையில், கிராமாந்திரப் பகுதிகளில் விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறையில் கடன் கொடுக்க 10 கிராமங்களுக்கு ஒன்று வீதம் 25 பாங்கிகளை முதலில் ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாக கூட்டுறவு மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளிக்கையில் மந்திரி எ. பி. ஷெட்டி கூறியிருக்கிறார்.

## நீளும் காலம்

'செகண்டரி' கல்விப் படிப்பு காலத்தை மூன்றாண்டிலிருந்து நான்காண்டு காலமாக நீடித்து பல்கலைக்கல்லூரிப் படிப்புக் காலத்தை நான்காண்டிலிருந்து மூன்றாண்டு காலமாகக் குறைக்கும் செகண்டரி கல்விக் குழு சிபாரிசு சர்க்காரின் பரிசிலனையிலிருப்பதாக கல்வி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் எற்கனவே செகண்டரி கல்விப் படிப்பு 11 ஆண்டாக உள்ளது என்றும், வட இந்திய மாநிலங்களில் இப்படிப்பு 10 ஆண்டாக இருக்கிறதென்றும், ஆகவே, சென்னையில் படிப்பு காலத்தை மேலும் நீடிக்கவேண்டுமா என்பதை சர்க்கார் பரிசீலித்து வருவதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

## பரிசீலனை மயம்!

ஆசிரியர்களின் வேலை நிலைமை, சம்பளம், படி, வேலையிலிருந்து ஒய்வு பெறும்போது வசதிகள் முதலியன பற்றி 'செகண்டரி' கல்விக்குழு தெரிவித்துள்ள சிபாரிசுகளை மாநில சர்க்கார் நிறுவியுள்ள தனிக்குழு பரிசீலனை செய்து வருவதாயும், அந்தக் குழுவின் சிபாரிசுகள் எல்லாவற்றையும் கவனித்து, அவற்றை எப்படி அமுல் செய்வது என்பது பற்றி ஆலோசனை கூறவுமே இந்த தனிக்குழு என்றும் கல்வி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

# பிரதமர் நீடூழி வாழ பிரார்த்தனை!

சென்னை, மார்ச் 14—

பிரதமர் நேருவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நாகபுரியில் நடைபெற்ற சம்பவத்தை சென்னை சட்டசபை வன்மையாகக் கண்டித்ததுடன், 'பிரதமர் நேரு நீடூழி வாழவேண்டும்' என்றும் சபை பிரார்த்தித்தது.

இச்சம்பவத்தால், சபை திடுக்கிட்டதாக பிரதமர் நேருவுக்கு அறிவிப்பது என்னும் முடிவெடுக்கப் பட்டது.

## ரூ. 24 கோடி செலவில் பாதாள சாக்கடைகள்!

சென்னை சட்டசபையில் தகவல்

ரூ 24 கோடி செலவில், 50 முனிசிபல் நகரங்களில் பாதாள சாக்கடைகள் அமைக்கப்படுமென்றும், 1954—55-ல் இதற்கான உதவி பெறுவதில் கும்பகோணம், ஸ்ரீரங்கம் ஆகிய நகரசபைகள் முன்பாத்தியதை பெறுமென்றும் சென்னை சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

# நாடு முழுவதும் மதுவிலக்கு அமுல்

## அபிவிருத்தி வேலைகட்கு அடிப்படையாகுமாம்!

இன்னும் 3 ஆண்டு காலத்திற்குள் நாடுமுழுவதிலும் மதுவிலக்கு அமுலாகிவிடுமென நம்புவதாகத் திட்டக் குழுவினல் நியமிக்கப்பட்ட மதுவிலக்கு விசாரணைக்குழு உறுப்பினரான என். எஸ். வரதாச்சாரி கூறியிருக்கிறார்.

அவர் மேலும், நாட்டின் எல்லா அபிவிருத்தி வேலைகட்கும் இம் மதுவிலக்கு அடிப்படையாகுமென்றும், திட்டக் குழு இதற்கு முதலிடம் அளித்துள்ளதென்றும்தெரிவித்திருக்கிறார்.

இவ்வாண்டு ஜூன் திங்கள் இறுதிக்குள்ளாகவே மதுவிலக்கு விசாரணைக் குழு, தனது அறிக்கையைச் சர்க்காரிடம் சமர்ப்பித்துவிடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

# மன்னர் மகன் மன்னராகிறார்!

நேபாள மன்னராக இருந்த திரிபுவனர் காலமானதை யொட்டி அவரது குமாரரான மகேந்திரவீர் பிக்ரம ஷா பதவி ஏற்ரார் என்று தெரிகிறது.

அவர் மன்னரான பிறகு முதன் முதலில் மக்களிடத்தில் பேசுகையில், நாட்டின் முன்னேற்றத்திற்காக மக்கள் ஒத்துழைப்பதுடன், ஒற்றுமையாயிருக்கவேண்டும் என்றும் பேசியிருக்கிறார்.

# இப்போது இல்லை!

இந்தியப் பிரதமர் நேருவும், பாகிஸ்தான் பிரதமர் முகமது அலியும் மார்ச் 28-ந் தேதி சந்திப்பதாயிருந்தது ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்றும், அவர்கள் ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டிற்குப் பின் சந்திப்பார்கள் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலக பாங்கியின் ஒருகோடிடாலர் கடன்

இந்தியத் தொழிற் கடன், முதலீடு கார்ப்பொரேஷனுக்கு, உலக பாங்கி ஒரு கோடி டாலர் கடன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது என்று தெரிகிறது.

இந்தக் கார்ப்பொரேஷன் சின்னுட்களுக்கு முன், இந்திய, பிரிட்டிஷ், அமெரிக்க தொழிலதிபர்களால் ஆரம்பிக்கப்பட்டது. நோக்கம், இந்தியாவின் தனியார் தொழில்களை அபிவிருத்தி செய்வதேயாகும்.

# எதற்காகவோ?

பார்மோசாவில் உள்ள சியாங் படைகளுக்கு அமெரிக்கா மேலும் 480 லட்சம் டாலர் கொடுக்கத் தீர்மானித்துள்ளதாம்.

சென்ற ஜூலை 1-ந் தேதி முதல் இதுவரை அமெரிக்கா, பார்மோசாவுக்கு (சியாங்கிற்கு), தற்போது கொடுக்கத் தீர்மானித்துள்ளதைச் சேர்த்து மொத்தம் 1,380 லட்சம் டாலர் கொடுத்துள்ளதென்றும், இந்தக் கணக்கில் யுத்தத் தளவாடங்கள் சேர்க்கப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

# இளவரசியின் 'காதல்' கதை!

"பிரிட்டிஷ் இளவரசி மார்கரெட், என்னை மணப்பதற்கான விருப்பத்தை இதுவரை எனக்குத் தெரிவிக்கவில்லை; அவர் அவ்வாறு முடிவு செய்திருப்பதாக நான் எண்ணுவதற்குக் காரணமும் ஒன்றுமில்லை; நான் கூறியதாக வந்துள்ள சில செய்திகள் அத்தனையும் பொய்யானதேயாகும்," என்று காப்டன் டவுன்சென்ட் கூறியுள்ளார்.

# பின்தள்ளப்பட்ட வகுப்பு மக்களுக்கு நீதி வழங்குக!

## கொடுக்கும் சலுகையை விரிவாக்க வேண்டும்

### சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி

"இந்த மந்திரி சபையில்கூட பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மூன்று மந்திரிகளும், ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த ஒரு மந்திரியும் இருக்கின்றனர்; ஆகையால், இச்சபையில் வாதிடுவதற்குப் போதுமான பலமிருக்கிறது—சட்ட சபையில், ஆதிதிராவிட மக்களையும், பிற்பட்ட இனத்தவரையும் சேர்த்தால் போதுமான பலம் இருக்கிறது; ஆகையால் இந்த மக்களுடைய நலனுக்காக அமைச்சர் அவர்கள் பாடுபடவேண்டும்."

"இது சாதிப் பிரச்சினை அல்ல — பெருவாரியான மக்களுடைய பிரச்சினை—தேசீயப் பிரச்சினை ஆகும்; பெரும்பான்மையினரான சமூகத்தவர் இதுவரையிலும் பொருளாதாரத் துறையில் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்—மதத் துறையில் இழிவு படுத்தப்படுகிறார்கள் என்பதற்காக, 'ஆதிதிராவிட சமூக முன்னேற்றம்' என்று அதற்கென ஒரு இலாகாவையும் வைத்து பணத்தையும் ஒதுக்கியிருக்கிறார்கள்; இந்தப் பிரச்சினை பாதிக்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள மக்களின் பிரச்சினையாக இருப்பதால், ஒதுக்கியிருக்கிற தொகை போதாது—ரூ. 1 கோடி 9 லட்சம் போதாது; அத்தொகையை ரூ. 5 கோடியாக்கி, ஆதிதிராவிட சமூக முன்னேற்றத்திற்கு ரூ. 3 கோடியும், பிற்பட்ட இனத்தவர் முன்னேற்றத்திற்கு ரூ. 2 கோடியும் ஒதுக்கவேண்டும்; அப்போது தான் உள்ளபடியே அவர்களுக்கு ஓரளவு முன்னேற்றமாவது ஏற்பட வசதி செய்ய முடியும்."

"தமிழ் நாட்டின் மொத்த மக்கள்தொகையான 3½ கோடியில், ஆதிதிராவிடர்கள் 58 லட்சம் பேர் இருக்கின்றனர்; பிற்பட்ட இனத்தவர்கள் 2 கோடி பேர் இருக்கிறார்கள்; அந்த பிற்பட்ட இனத்தில் 1 கோடி வன்னியர்கள் இருக்கிறார்கள்; இவ்வளவு பெருவாரியான தொகையைக் கொண்ட மக்களின் நிலைமை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் இன்றைய அரசியல் நிலைமையில், அரசாங்கப் பதவியிலிருப்போரை எடுத்துக் கொண்டால் நன்றாக விளங்கும்."

"பிற்பட்ட இனக்குழு, தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்ததும், அதில் கண்டிருக்கிற பிரச்சினைகளைக் கவனித்து ஆவன செய்ய ஆட்சியினர் முன்வரவேண்டும்; பிற்பட்ட வகுப்பினரில் ஏதோ சிலருக்கு உபகாரச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) கொடுப்பதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது; உபகாரச் சம்பளத் தொகையை அதிகரிக்கவேண்டும்; எல்லா பிற்பட்ட மக்களுக்கும் உபகாரச் சம்பளம் கிடைக்குமபடியான அளவுக்கு வசதி செய்து தரப்படவேண்டும்."

"பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் வேண்டுமென்றால், சாதியைச்சேர்ந்த 'சர்டிபிகேட்டை' ஆண்டுதோறும் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது; பள்ளிகளில் சேரும்போது, மாணவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர்—கள்ளரா, படையாச்சியா, தேவரா—என்று எழுதிவைத்துவிட்டுத்தான் சேருகிறார்கள்; பின்னர் ஏன் அடிக்கடி அந்த 'சர்டிபிகேட்'டுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்? மேலும், மாணவனுடைய பெற்றோர், அவர்களது நிலைமை, சொத்து ஆகியவை பற்றிய விபரம் கொடுக்க, தாசில்தார் 'சர்டிபிகேட்'டும் வாங்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்; அது அவ்வளவு சுலபமான காரியமல்ல; தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் எப்படி தாசில்தாரைக் காணமுடியும்?—கெஜடட் அதிகாரிகளைப் பார்க்க முடியும்?"

"இவற்றைத் தவிர உபகாரச் சம்பளம் கொடுக்க எழுதி அனுப்பவேண்டிய குறிப்பிட்ட 'மனுத்தாள்' (form) காலங் கடந்து கிடைக்கிறது; ஒவ்வொரு பள்ளியிலும் கூட அந்த 'மனுத்தாள்' கிடைப்பதில்லை; சில சமயங்களில் செல்வாக்குடையவர்களுக்குத்தான் கிடைக்கிறது; இந்தத் தொல்லைகளைப் போக்குவதற்கு, 'கிராம மணியக்காரரோ, அல்லது நகர சபை, மாவட்டக் கழகம், சட்டசபை ஆகியவைகளின் உறுப்பினர்கள் எவரேனும் நற்சாட்சி (சர்டிபிகேட்) கொடுத்தால் போதும்' என்று, நிபந்தனைகளை மாற்றியமைக்கவேண்டும்."

—இவ்வாறு தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள், 11—3—55-ல் நடைபெற்ற சென்னை சட்ட சபைக் கூட்டத்தில், அரிசன மானிய வெட்டுப் பிரரேபணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"ஆதித்திராவிட, பிற்பட்ட இன மக்கள் முன்னேற்றம், மடாலய இலாகா போன்றவைகளை அமைச்சர் பரமேசுவரன் அவர்களிடம் ஒப்படைத்தமைக்காக முதலமைச்சரைப் பாராட்டுகிறேன். பொருளாதாரத் துறையில் தாழ்ந்துகிடக்கிற ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்தையும், அவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள பிற்பட்ட இன மக்களின் முன்னேற்றத்தையும், பிற்பட்ட இனத்தவர் ஒருவரது கையில் ஒப்படைத்திருப்பது, இந்த மக்களின் நலனைப் பாதுகாக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்வார்கள் என்ற நல்ல நம்பிக்கையை உண்டுபண்ணத்தான் செய்யும்.

"அதுபோலவே, மதத்தின் பெயரால் ஆதிதிராவிட மக்கள் மிகவும் கேவலப்படுத்தப்படுகிறார்கள்; அந்த நிலைமை போக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகவே, மடாலய இலாகாவையும் அவரது கையில் ஒப்படைத்துள்ளனரெனவும் நம்புகிறேன்; பொருளாதாரத்துறையிலும், மதத்துறையிலும் தாழ்ந்த நிலையிலுள்ள மக்களை நல்ல நிலைக்கு உயர்த்தவேண்டியது அமைச்சர் பரமேசுவரனின் கடமை என்பதை நினைவூட்டும் முறையிலேயே இவைகளைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

"பிற்பட்ட இன மாணவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று 'பாரிஸ்டர்,' 'டாக்டர்' போன்ற பெரிய படிப்புகளைக் கற்றுத் தேர்வதற்கும் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் வேண்டிய பணத்தை சர்க்கார் ஒதுக்கவேண்டும்; பிற்பட்ட இன மாணவர்களும், ஆதிதிராவிட மாணவர்களும் மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க வசதி செய்துகொடுத்தால்தான் அந்தச் சமுதாயம் முன்னேற வழி செய்ததாகும்.

"இப்போது, உத்தியோக நியமனங்களிலே, ஆதிதிராவிடருக்கு 15 சத விகிதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சத விகிதமும், மற்ற 'தகுதி' உள்ளவர்கட்கு 60 சத விகிதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்புப் பிரச்சினையில், மிகவும் தாழ்ந்து கிடக்கின்ற காரணத்தினாலேயே அவர்கள் தள்ளப்பட்டு வருகிறார்கள். ஆதிதிராவிடருக்கு 15 சத விகிதம் என்றிருப்பதை 25 சத விகிதமாகவும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 சத விகிதம் என்றிருப்பதை 50 சத விகிதமாகவும் மாற்றி அமைக்கவேண்டும். இந்த மாதிரி விகிதத்தை ஒரு பத்தாண்டு காலத்திற்காவது கடைபிடித்தால்தான் ஓரளவுக்காவது அவர்களிடையே முன்னேற்றம் ஏற்படலாம்.

"இம்மாநில சர்க்கார், 'வகுப்பு வாரி முறை'யை ஒழித்துவிட்டது;—'சாதி மதச் சார்பற்ற சர்க்கார்' என்று தன்னைச் சொல்லிக்கொண்டு, திரு. முத்தையா முதலியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'சமூகவாரி பிரதிநிதித்துவ'த் திட்டத்தை — பிற்பட்ட வகுப்பினருக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் நன்மை அளித்துவந்த ஒரு அருமையான திட்டத்தை—சில ஆண்டுகட்கு முன்பு ஒழித்துவிட்டது என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமலிருக்க இயலவில்லை.

"வன்னியகுல மக்கள் 1கோடி பேர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது; ஒரு கோடி மக்களின் பிரதிநிதிகளாக 31 உறுப்பினர்கள் இங்கே உள்ளனர்; 31 உறுப்பினர்கள் இருந்தும்கூட, வன்னியகுல மக்களின் உரிமை சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை; நியாயமான உரிமைகள்கூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை; வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாவட்டக் கலெக்டரோ, அல்லது உயர் நீதிமன்ற நீதிபதியோ கிடையாது; மாவட்ட நீதிபதியே இல்லை என்றால், பின்னர் எப்படி உயர் நீதிமன்ற நீதிபதி இருக்க முடியும்? ஏதோ ஒரு குறிப்பிட்ட சாதியைப் பற்றி குறிப்பிடுவதாக நினைக்கக் கூடாது; எல்லாத் துறைகளிலும் வன்னியர்கள் பின் தங்கிக் கிடக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டவே இதை எடுத்துக் காட்ட வேண்டியதிருக்கிறது.

"சாதி வித்தியாசமில்லாமல் இப்போது ஏழை மாணவர்கட்கு மூன்றாவது பாரம் வரையிலும் சம்பளச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது; 'சாதி, மதம் ஒழிய வேண்டும்,' என்று சொல்லும்போது, வன்னிய சாதியினருக்கென தனிப்பட்ட சலுகைகள் காட்ட வேண்டுமெனக் கூற இயலாது; ஆனால், சாதி, மத அடிப்படையில் சலுகைகள் கொடுக்கும்போது, பிற்பட்ட இனத்தவருக்கு உபகாரச் சம்பளம், சம்பளமில்லாமல் படிப்பதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

"உத்தியோகத் துறையிலும் பிற்பட்ட இனத்தவர்கள் முன்னேறுவதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்; அண்மையில் நியமனம் செய்யப்பட்ட 7 டெபுடி கலெக்டர்கள் வேலைக்கு சென்னையிலுள்ளவர்களையே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்; மாவட்டங்களிலிருந்து ஒருவரையும் தேர்ந்தெடுக்கவில்லை. அதிலும் 'பெரிய இடத்து' மாணவர்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படியானால் எங்களைத் தேர்ந்தெடுத்த பிற்பட்ட மக்களின் நிலைமை என்ன?

"ஆதிதிராவிடர்கட்கும், பிற்பட்ட மக்களுக்கும் ஒதுக்கியிருக்கின்ற தொகை மிகக் குறைவாக இருக்கிறது—கடலில் கரைத்த பெருங்காயம் போல்தான் இத்தொகை இருக்கிறது; அதை இன்னும் உயர்த்த வேண்டும்.

"'சில சமயங்களில் பிற்பட்ட வகுப்பினருக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் சண்டை ஏற்படுகிறது,' என்று சபையில், தோழர் கல்யாணசுந்தரம் கூறினார்; நான் அவரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், 'அவர்கள், தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்ளும்படி தூண்டிவிட வேண்டாம்,' என்பதுதான்.

"இப்போது ஆதிதிராவிடர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்குமிடையே ஒற்றுமை நிலவி வருகிறது; அவ்வொற்றுமையைக் குலைக்கும் அளவுக்கு உறுப்பினர் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். முற்பட்ட இனத்தவர்கள் சண்டை மூட்டிவிட்டாலொழிய ஆதிதிராவிடர்கட்கும் - பிற்பட்ட வகுப்பினருக்குமிடையே சண்டை ஏற்படாது; சட்டசபையிலே பேசி, வீணாக அவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்திவிட வேண்டாம்.

"அண்மையில், சபை உறுப்பினர்களான தோழர்கள் சகஜானந்தாவிற்கும்— அரங்கநாதனுக்குமிடையே ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. அது எவ்வளவு தூரம் வெளியே உள்ளவர்களைப் பாதித்துள்ளது என்பது கல்யாணசுந்தரத்திற்குத் தெரியாதது அல்ல. ஆதிதிராவிடர்கள் வாய்க்காலில் இருந்தால் பிற்பட்ட வகுப்பினர் வரப்பில் இருப்பார்கள்; அவர்கள் முன்னாலிருந்தால், இவர்கள் பின்னாலிருப்பார்கள்; ஆகவே, முற்போக்கு சமூகத்தவர், ஒரே குடும்பத்துக்குள்ளேயே குழப்பத்தைத் தோற்றுவிக்கும் நிலைமைக்குச் சென்றுவிடக்கூடாது.

"ஒற்றுமை வளரவேண்டும்; சாதி வித்தியாசம் ஒழிய வேண்டும்; ஆதிதிராவிடர்கட்கும்—பிற்பட்ட வகுப்பினருக்குமிடையே குழப்பத்தை உண்டாக்குவதாயிருந்தால், சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் தோல்வி ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

"சில உத்தியோகங்களுக்கு ஆதிதிராவிடர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, முற்பட்ட இனத்தவர்கள்,' அந்த உத்தியோகங்களைப் பெற்றுவிடுகிறார்கள்; ஆதிதிராவிடர்கள் கிடைக்கவில்லை என்றால், அவ்விடங்கள் பிற்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட வேண்டும்."

இவ்வாறு தோழர் கோவிந்தசாமி அவர்கள் கூறிமுடித்ததும், தோழர் எம். கலியாணசுந்தரம் எழுந்து, கூறியதாவது:—

"எப்பொழுதுமே நிதானமாக விஷயங்களைப் பேசக்கூடிய திறமைவாய்ந்த தோழர் கோவிந்தசாமி அவர்கள் நான் கூறினதைத் தவறாகப் புரிந்து கொண்டார்களோ என்னவோ, தெரியவில்லை. அவர் நினைப்பது முற்றிலும் தவறு; அவர் கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். நான் சொல்வதைத்தான் அவரும் சொல்கிறார்; அரிசன விவசாயிகளின் 'நிர்கதியைப் பயன்படுத்திக் கொண்டு, மேல் சாதியைச்

(4-ம் பக்கம் பார்க்க)



23—2—55-ல், சிதம்பரத்தில், திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தி, 'டாக்டர்' விருது வழங்கிய பாராட்டு விழாவின்போது, தமிழ்ச் சங்கம், தமிழாசிரியர்கள், மாணவர்கள், திருவள்ளுவர் கழகத்தினர் ஆகியோர் சார்பில் வாழ்த்திதழ்கள் வழங்கப்பட்டன. படத்தில், தோழியர் விஜயலட்சுமி அம்மையார் டாக்டர் அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரம் வழங்குவதைக் காணலாம்.

# தொழிலாளர் சுகாதார — இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

## சென்னையிலும் அமுலாகிறது

சென்னை, மார்ச் 15—

“சென்னை நகரில் தொழிலாளர் சுகாதார இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், மேலும் ஆறு மாவட்டங்களில் அத்திட்டத்தின் பலனை விரைவில் கைத்தொழில் பகுதிகளில் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் சர்க்காரால் மேற்கொள்ளப்படும்,”

என்று அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில், தொழில் மானியப் பிரரேபணை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“இந்தத் திட்டம் இப்போது கோவையில் அமுலிலுள்ளது; மதுரை நகர், விக்கிரமசிங்கபுரம், தூத்துக்குடி, சேலம், திருச்செங்கோடு, மேட்டூர், திருப்பூர், உடுமலைப்பேட்டை, பெருக், கோழிக்கோடு, கண்ணனூர், மங்களூரைச் சுற்றியுள்ள சில பிரதேசங்களிலும் இத்திட்டம் விரைவில் அமுல் செய்யப்படும்,” என்றும் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி மத்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்.

இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட இருக்கும் பிரதேசங்களில் தொழிலாளர் நலன் கருதி மருத்துவமனைகளில் இடவசதியைப் பெருக்கவும், அதற்காகும் செலவில் 75 சதவிகிதத் தொகையை மானியமாகவும், பாக்கி 25 சதவிகிதத்தையும் பல தவணைகளில் திருப்பிக் கொடுக்கும் கடனாகவும் தர மத்திய சர்க்கார் ஒப்புதல் தந்துள்ளதெனவும் அவர் அறிவித்தார்.

தொழிலாளர்களின் குடும்பத்தவர் நலனுக்கெனவும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும், அது விஷயம் மத்திய சர்க்காரின் பரிசீலனையில் ஏற்கனவே இருந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

துணி ஆலை முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசுகளில் சிலவற்றையாவது அமுல் செய்ய விரைவில் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

‘ரிட்டையர்’ ஆன நீதிபதிகளைக் கொண்ட தொழில் ‘டிரிபியூனல்’களை நிறுவாமல், வேலையிலிருந்து வரும் மாவட்ட நீதிபதிகளையே அந்த ‘டிரிபியூனலி’ல் நியமிப்பது என்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

மத்திய சர்க்காரின் தொழில் தகராறு சட்டத்திருத்த மசோதா நிறைவேறிய பின்னர், ‘அப்பீல் டிரிபியூனல்’கள் இருக்காதெனவும், 100 பேருக்குக் குறைவான தொழிலாளர்கள் கொண்ட தொழில் நிறுவனங்களில் எழும் சிறு சச்சரவுகளைத் தவிர்க்க, மாவட்ட முனிசிப்புகளைக்கொண்ட சிறு தொழில் கோர்ட்டுகள் அமைக்கப்படுமெனவும், தொழிலாளர் நலன், கைத்தொழில் முன்னேற்றம், உற்பத்திப் பெருக்கு ஆகியவற்றுடன், தொழிலாளர்களுக்கு உதவும் நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தலாமென சர்க்கார் ஆலோசித்து வருகிறதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## சாத்தியமில்லையாம்!

சென்னை, மார்ச் 14—

கோவை மாவட்டத்தில் மேல் பவானி திட்டம் சாத்தியமானதல்லவென்று பிரதம எஞ்சினீயர் தெரிவித்திருப்பதாகவும், ஏரி, குளங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுபற்றி வேறு ஏதாவது வழி இருப்பது தெரிவிக்கப்பட்டால் கவனிப்பதாகவும் கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

சட்டசபையில் இத்தகவலை, மராமத்து இலாகா மந்திரி கூறியிருக்கிறார்.

### உத்தேசமில்லை

“ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்கள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 60-ஆக உயர்த்த தற்சமயம் சர்க்காருக்கு உத்தேசமில்லை” என்று கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கல்வி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

## சென்னையில் சிறப்புக் கூட்டம்

13—3—55 காலை 10 மணியளவில், சென்னை கோகலே மண்டபத்தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் ஒரு சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமை தாங்கினார். தோழர் என். வி. நடராசன் அவர்கள் ‘சிதம்பர இரகசியம்’ எனும் தலைப்பிலும், தோழர் டி. கே. சீனிவாசன் ‘இலட்சியப் பாதையில் நாம்’ என்பது பற்றியும், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி ‘கடவுள் எங்கே?’ என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். ஏராளமான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## பின்தள்ளப்பட்ட.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த நிலப் பிரபுக்கள்தான் தூண்டிவிடுகிறார்கள்; அப்படி இருக்கும்போது, நான் தூண்டிவிட முயற்சிக்கிறேன் என்ற முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.”

தோழர் கோவிந்தசாமி அவர்கள் இதற்குப் பதில் கூறும் வகையில் கூறியதாவது:—

“நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆரம்பத்தில் பேசும்போது, ‘மிராசுதாரர்கள்தான் குழப்பத்தைக் கிளறிவிடுகிறார்கள்,’ என்றார்; பின்னர், ‘ஆதி திராவிடர்களுக்கும்—பிற்பட்ட இனத்தவர்கட்குமிடையிலேயே இப்பொழுது பகைமை இருந்து வருகிறது,’ என்றார்; இப்போது ‘இல்லை’ யென்று சொன்னாலுங்கூட, சர்க்கார் ‘ரிக்கார்டு’ல் அதைப் பார்த்தறிந்து, தம்முடைய தவறான எண்ணத்தை மாற்றிக் கொள்வார் என்று நம்புகிறேன்.

“இந்த அரிசன மானிய வெட்டுப் பிரரேபணையை நானே கொண்டு வருவதற்கிருந்தேன்: ஆனால் நண்பர் கல்யாணசுந்தரம் தான், ‘நீங்கள் கொண்டு வருவதை விட ஆதிதிராவிடர்களைப் பற்றி வெட்டுப் பிரரேபணை கொடுத்த நான் கொண்டுவந்தால் நல்லது’ என்று கூறிவிட்டார்; அதிலிருந்து அவருடைய எண்ணத்தைப்புரிந்து கொள்ளலாம்; ஆகவே, இன்றைய தினம் பிற்பட்ட வகுப்பினருக்கும்; ஆதிதிராவிட மக்களுக்கும் இடையே சண்டை சச்சரவுகளை உண்டாக்க வேண்டாமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.”

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க நெய்

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு சுமார் 20 லட்சம் டாலர் பெறுமான 40 லட்சம் பவுண்டு நெய் விற்றிருப்பதாக அமெரிக்க விவசாய இலாகா தெரிவித்திருக்கிறது.

கிழக்கு நாடுகளில் ஒரு பவுண்டு 58 சதம் வீதம் விற்கப்படும் அமெரிக்க நெய், முதன்முதலாக பாகிஸ்தானுக்கு 50 சதம் வீதம் விற்கப்பட்டுள்ளதாம்.

## காஞ்சியில் கலை விழா

சர்க்கார், ஏழை மாணவர்களுக்கு எட்டாம் வகுப்புவரை மட்டுமே இலவசக் கல்வி வசதி அளித்திருக்கிறார்கள்—இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்படி; தொடர்ந்து ஏழை மாணவர்கள் கல்வி பயிலும் பொருட்டு அவர்களுக்கு உதவுவதற்காக, காஞ்சீபுரத்தில் கலைவிழா ஒன்று ஏற்பாடு செய்து, நிதி திரட்டப்படுகிறது.

ஏழைகளுக்குக் கல்விக் கண் தரும் இச்சீரிய பணிக்கு பொது மக்கள் அனைவரும் தங்களாலான பொருளுதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கலைவிழாவில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன், மனோகர், மற்றும் பல கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் நாடகங்கள் இடம் பெறுகின்றன.

சட்டசபை உறுப்பினர்களான சுயம்பிரகாசம் டி. சண்முகம், ஏ. கோவிந்தசாமி, எஸ். தெய்வசிகாமணி ஆகியோர் ஒவ்வொரு நாள் நாடகத்தின் போதும் தலைமை தாங்கி உரை நிகழ்த்துவர்.

காலமும், இடமும், நிகழ்ச்சி நிரலும் அடுத்து அறிவிக்கப்படும் என்று, கலைவிழாக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

## கழகக் கூட்டம்

★

அதிராம்பட்டினம்
பழஞ்செட்டித் தெருவில்
18—3—55 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
என். எஸ். இளங்கோ

**திருச்சி நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு**

20—3—55 காலை 10 மணிக்கு, திருச்சி, சுண்ணாம்புக்காரத் தெரு, தி. மு. கழகக் கட்டிடத்தில் திருச்சி நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர தி. மு. கழகத்தின் வரவு-செலவு கணக்கு ஒப்படைக்கப்படும்.

**சென்னை 23-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு**

20—3—55 காலை 10 மணிக்கு, சென்னை, புரசை, எண் 27, அரசப்ப முதலி தெருவில், சென்னை 23-வது வட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக தேர்தல் பற்றி முடிவு செய்யப்படும்.

**சென்னை 17-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு**

20—3—55 காலை 10 மணிக்கு; சென்னை 17-வது வட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம், கழக மனையில் நடைபெறும். அதுபோது புதிய தேர்தல் நடத்துவது, மற்றும் சில பிரச்சினைகளைப் பற்றி ஆராயப்படும்.

**செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு**

20—3—55 காலை 9½ மணிக்கு, காஞ்சீபுரம், ‘திராவிட நாடு’ நிலையத்தில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டின் வரவு-செலவு கணக்குகளையும், கழக முக்கிய நடவடிக்கைகளையும் பற்றி பேசி முடிவு செய்யப்படும்.

## சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

மார்ச் 17: திண்டிவனம் (காலை: திருமணம்)
19: கடலங்குடி
20: சேலம்
21: குளித்தலை

## ஆதிவாசிகளிடை மதத் தகராறு

### கிருத்துவர்கள் இதர ஆதிவாசிகளை மதிப்பதில்லையாம்!

ஜகதல்பூர், மார்ச் 13—

“ஆதிவாசிகள், கிருத்துவ ஆதிவாசிகள் மீது ஏராளமான புகார்கள் எழுப்பியுள்ளனர். இதர ஆதிவாசிகளின் வாழ்க்கை லட்சியத்தை, கிருத்துவ ஆதிவாசிகள் மதிப்பதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.”

—இவ்வாறு, பின்தள்ளப்பட்ட வகுப்பு ஆய்வுக் குழுத் தலைவர் காகா கலேல்கர் குறிப்பிட்டிருக்கிறார்.

அகில இந்திய மூன்றாவது பழங்குடி மக்கள் க்ஷேமநல மாநாட்டின் சமூக நலப் பிரிவிற்குத் தலைமை தாங்குகையில் பேசிய அவர், மேலும் குறிப்பிட்டார்:—

“பழங்குடி மக்களின் குருட்டு நம்பிக்கைகளை ஒழிக்க அவர்களிடையே விஞ்ஞான அறிவு பரப்பப்பட வேண்டும். பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்கு காந்தியார் வகுத்த ஆதாரக் கல்வித் திட்டமே சிறந்ததாகும்.”

## சேரி ஒழிப்பு: சர்க்கார் திட்டம்

சிங்கப்பூர் புறநகரில் சென்ற ஐம்பதாண்டுகளாக ஏழைகள் வசித்து வந்த பகுதி, நவீன வசதிகளுள்ள நகர்ப்புறமாக மாற்றப்பட்டு வருகிறது. நகரில் பல பகுதிகளிலுள்ள சேரிகள் காலி செய்யப்பட்டு, அங்கு வசித்தவர்களுக்கு குடியேற வசதியுமளிக்கப்படுகிறது. இந்தப் புது நகரத்திற்கு ‘க்வீன்ஸ் டவுன்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 1953-ல் ஆரம்பிக்கப்பட்டது; திட்டம் பூர்த்தியானால் இங்கு 65,000 மக்கள் சகல வசதிகளுடனும் வசிக்க முடியும்.

சுகாதார வசதிகளும், குடி தண்ணீர், பாதை வசதிகளும் நிறைந்த இந்தக் குடியேற்ற இடத்தில் ஒரு பள்ளிக்கூடம், கோவில், கிராமச் சாவடி முதலியவற்றைக் கட்ட சர்க்கார் திட்டம் உண்டு. திட்டம் பூர்த்தியானால் இது நவீன வசதிகளுள்ள ஆரோக்கியமான கிராமமாக இருக்கும்.

## பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் துப்பாக்கி தாக்குதல்

மாஸ்கோவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் ஒரு ரஷ்யன், துப்பாக்கியுடன் புகுந்து, வாயிலிலிருந்த ரஷ்ய காவலாளியைச் சுட்டு வீழ்த்திவிட்டு, துப்பாக்கிகளால் பலமுறை சுட்டான் என்று செய்தி வெளியாகியுள்ளது.

தூதுவரான சர் வில்லியம் ஹேடெர், தற்செயலாக அந்த நேரத்தில் தம்மனைவியுடன் வெளியில் சென்றிருந்ததினால், துப்பாக்கித் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

பின்பு, அலுவலகத்திலிருந்தவர்கள் அவனைப் பிடித்து, துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு, பின்னர் ரஷ்யப் போலீசாரிடம் அவனை ஒப்புவித்ததாகவும் தெரிய வருகிறது.

## கொள்ளையர் துணிகரம்

### ரூ. 1,82,000 அபகரித்தனர்

இரங்கூன், மார்ச் 14—

அக்யாப் எனும் நகரில் சர்க்கார் விவசாய மார்க்கெட்டிங் போர்டு காரியாலய கணக்காளர் நெல் வாங்கியதற்காக வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்க சர்க்கார் கஜானாவிலிருந்து ரூ. 1,82,000 வாங்கிக் கொண்டு காவலாளிகளுடன் வருகையில், ஆயுதந் தாங்கிய கொள்ளையர்கள் அவர்களை வழிமறித்து, அப்பணப் பெட்டியை அக்காவலாளிகளையே தூக்கிவரச்செய்து, பக்கத்திலுள்ள ஆற்றில் நிறுத்தப்பட்டிருந்த படகொன்றில் வைக்கச் சொல்லி பின்னர் அக்காவலாளிகளைத் துரத்திவிட்டு, படகிலேறி மறைந்துவிட்டனராம்!

## யானைப் பசிக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின்படி, துவக்க நடவடிக்கையாக மலபார், செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களிலும் மொத்தம் 15 கிராமங்களில் சுமார் 225 வீடுகள் கட்டப்பட்டு அவைகள் அரிசனங்களுக்கு இலவசமாக ஒதுக்கப்படலாமெனவும், அவ்வீடுகள் ஒவ்வொன்றின் அதிக பட்சச் செலவு ரூ 1,000 ஆக இருக்கலாமெனவும் தெரிகிறது.

இது தவிர, இம்மாநிலத்திலுள்ள குறவர்களுக்கு உதவும் வகையில் அவர்கட்கும் வீடு கட்டித்தரும் திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதன் முதலாக சேலம் மாவட்டம் ஆத்தூரில் 25-ம், வட ஆற்காடு வந்தவாசியில் 25-ம், மதுரை தாலுகாவில் 12-ம் ஆக 62 வீடுகள் கட்டித் தருவதெனவும், அவ்வீடுகள் ஒவ்வொன்றிற்கும் ஆகும் செலவு ரூ. 400 ஆக இருக்கலாமென்றும், கட்டித் தரப்படும் ஒட்டடுக்கு வீடுகளுக்காகும் ரூ 3000 செலவையும், முன்னாள் குற்ற பரம்பரையினரை வாழ்க்கையில் குடியமர்த்த வேண்டுமென்றுதான் வகுத்துள்ள திட்டப்படி, மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமென்றும் கூறப்படுகிறது.

## பல்கலைக் கழக பட்டப்படிப்பு

சென்னை, மார்ச் 14—

பூர்வாங்க பல்கலைக் கழகப் படிப்புத் திட்டத்தை இடைக்கால ஏற்பாடாகவும், அதன்பின் தொழிற் கல்விக்குப் பூர்வாங்கமாக அடிப்படை விஞ்ஞானப் பாடங்களில் ஓராண்டு பயிற்சி அளிக்கும் திட்டமாகவும் அமுல் நடத்துமாறு தென்னிந்திய பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதற்குப் பிறகே பட்டப் படிப்பு மூன்றாண்டு காலம் நீடிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டதாம்.

## அமைச்சருக்கு சபாநாயகர் கட்டளை!

ஜம்மு—காஷ்மீர் உதவி அபிவிருத்தி மந்திரி அசதல்லா மீர், சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், வாயில் வெற்றிலை பாக்கு குதப்பிக்கொண்டே பதிலளித்து வந்தாராம்.

அந்த ஒழுங்கற்ற நடத்தைக்காக, சபாநாயகர் அவரை இழுத்து, வெளியே சென்று, வெற்றிலையைத் துப்பிவிட்டு வந்து சபையில் பேசுமாறு உத்திரவிட்டாராம்!

மந்திரியும் அந்த உத்தரவை நிறைவேற்றி வைத்தாராம்!

---

திட்டக்குழு, மாநில சர்க்கார்களுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ள கடிதத்தில், கிராம அபிவிருத்திக்காக நிர்ணயித்துள்ள புதிய இலக்கு 10 ஆண்டு காலத்தில் உற்பத்தியை இரு மடங்காகப் பெருக்குமாறு கூறியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.